*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed monthly academic research journal*
**ISSN: 3049-0723 (Online)**
**3107-7781 (Print)**

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International
Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

**Vol. 12 No. 03 (2026): August 2026**, **p201-209**| Available online: www.tamilmanam.in

*Original Research Paper*

# எஸ்.ராமகிருஷ்ணன் புதினங்களில் குடும்பம்

Family in the Novels of S. Ramakrishnan

**எஸ். சரண்யா**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
ஆர்.வி. எஸ். கலை அறிவியல் கல்லூரி, சூலூர், கோவை – 641402.

**S. Saranya**,
*Ph.D. Research Scholar (Part-Time), R.V.S. College of Arts and Science, Sulur, Coimbatore – 641402.*

**முனைவர் அர. கண்ணன்,**
நெறியாளர், உதவிப் பேராசிரியர், ஆர்.வி. எஸ். கலை அறிவியல் கல்லூரி
சூலூர், கோவை - 641402

**Dr. R.Kannan***,
*Research Guide, Assistant Professor, Department of Tamil and other Languages,*
*RVS College of Arts & Science, Sulur, Coimbatore - 641 402.*
*Email: vaanavilkannan@gmail.com.*

*Article history*
Received: 25-07-2026
Revised: 29-07-2026
Accepted: 31-07-2026

*Corresponding Author Email: *vaanavilkannan@gmail.com*

**Abstract:** Family serves as the fundamental unit of society. In the Indian context, the entirety of social dynamics revolves around the family system. When closely examining the practical functioning of each family, one can observe that it encompasses various conflicts and contradictions. The novels of S. Ramakrishnan portray family relationships, inter-familial disputes, and their consequences with remarkable realism. This research paper aims to analyze the concepts of family depicted in S. Ramakrishnan's novels 'Sanjaram', 'Idakkai', and 'Pathin', along with the internal family conflicts, the impact of bad habits, the consequences of malnutrition, and the effect of male selfishness within the household. These novels possess a unique approach that captures the inner dynamics of the institution of family as realistic portrayals without resorting to over-sentimentalism.

**Keywords:** *S. Ramakrishnan, Novels, Family, Family Issues, Society, Bad Habits, Malnutrition, Male Selfishness*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**Article DOI: https://doi.org/10.63300/tm12032026.16**


### சுருக்கம் (Abstract)

சமூகத்தின் அடிப்படை அமைப்பாகக் குடும்பம் விளங்குகிறது. இந்தியச் சூழலில் மொத்த இயக்கமும் குடும்ப அமைப்பை மையமாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு குடும்பத்தின் நடைமுறை இயக்கத்தை நுட்பமாக ஆய்வு செய்யும்போது, அது பல்வேறு வகையான சிக்கல்களையும் முரண்பாடுகளையும் தன்னகத்தே கொண்டு இயங்குவதை உணரலாம். எஸ்.ராமகிருஷ்ணனின் புதினங்கள் குடும்பம் சார்ந்த உறவுகளையும், குடும்பத்தினருக்கிடையே ஏற்படும் பிணக்குகளையும், அவற்றின் விளைவுகளையும் மிகவும் யதார்த்தமாகச் சித்தரிக்கின்றன. இந்த ஆய்வுக் கட்டுரை எஸ்.ராமகிருஷ்ணனின் 'சஞ்சாரம்', 'இடக்கை', 'பதின்' ஆகிய புதினங்களில் காணப்படும் குடும்பம் பற்றிய கருத்துகளையும், குடும்பத்தினுள் நிலவும் பல்வேறு சிக்கல்களையும், தீய பழக்கவழக்கங்களின் தாக்கத்தையும், ஊட்டச்சத்துக் குறைபாட்டால் ஏற்படும் பாதிப்புகளையும், ஆண்களின் சுயநலம் குடும்பத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்புதினங்கள் குடும்பம் என்னும் நிறுவனத்தின் உள்ளார்ந்த இயக்கங்களை உணர்ச்சிவயப்படுத்தாது, எதார்த்தப் பதிவுகளாக வெளிப்படுத்தும் தனித்துவமான போக்கினைக் கொண்டுள்ளன.

**முக்கியச் சொற்கள்:** எஸ்.ராமகிருஷ்ணன், புதினங்கள், குடும்பம், குடும்பச் சிக்கல்கள், சமூகம், தீய பழக்கவழக்கங்கள், ஊட்டச்சத்துக் குறைபாடு, ஆண்களின் சுயநலம்.

### 1. அறிமுகம் (Introduction)

சமுதாயம் என்பது வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைப்பில் இருப்பது. அதில் தனி மனிதனுடன் சமூகம் ஒரு வகையில் தனித்துவம் பெற்றிருந்தாலும், இன்னொரு வகையில் ஒன்றையொன்று சார்ந்தது. அது மனிதனுக்கு மனிதன் ஏற்படுத்தும் உள் இணைப்பாகும். ஒருவர் அன்னொருவருக்குத் தூண்டுதலாக அமையும் நிகழ்வும், சமுதாய நடைமுறையில் தவிர்க்க முடியாதது. எந்த ஒரு சமுதாயமும் ஒருவருக்கொருவர் தொடர்பிலாது அமைய இயலாது. சமூகம் சில நெறிமுறைகளைக் கொண்டு அமைந்திருப்பது; அவற்றில் இருந்த எந்த ஒரு மனிதனும் தனித்து வாழ முடியாது. தனிமனிதன் எந்த ஒரு செயலையும் கடமையையும் செயல்படுத்த வேண்டுமெனில் அவன் தன்னைச் சார்ந்த குடும்பம், அரசு போன்றவற்றுடன் தொடர்பு கொள்ள வேண்டிய சூழலில் இருக்கிறான்.

தமிழகத்து வரலாற்றுக்குட்பட்ட காலம் சங்க காலம் ஆகும். இக்காலத்தில் தமிழரின் நாகரிகம் முழு வளர்ச்சியுற்றிருந்தது. மூன்று பேரரசுகள் சங்க காலத்தில் அமைந்திருந்ததைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இம்மூன்று பேரரசுகளை ஆண்ட மன்னர்கள் தங்கள் நாட்டிற்கு நன்மையைச் செய்து மேன்மையடையச் செய்தனர். ஒவ்வோர் மன்னர்க்கும் இடையே ஆதிக்கப்போட்டி நடைபெற்று வந்தாலும் நாட்டின் நலனில் அக்கறை கொண்டிருந்தனர். இச்சங்க காலத்தின் அரசியலில் மக்களின் பங்கும் அவசியமாகிறது. எனவே அக்கால மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகிறது.

'உணவு, உடை, உறையுள்' போன்றவை ஒவ்வொரு மனிதருக்கும் அடிப்படைத் தேவைகளாக உள்ளன. இவற்றிற்காக மனிதன் ஒரு குடும்பத்திற்குள்ளேயே போராடும் நிலை உள்ளது. அடுத்ததாக மனிதன் தனது உரிமைக்காக இந்த சமுதாயத்தில் போராட வேண்டிய நிலையில் இருக்கிறான். இத்தகைய அவசியப் போராட்டங்களை மேற்கொள்ளும் பொழுது அந்த மனிதனுக்கு குடும்பத்திலும்,

சமுதாயத்திலும் எண்ணற்ற சிக்கல்கள் உருவாகின்றன. அத்தகைய சிக்கல்கள் குறித்து எஸ்.ராமகிருஷ்ணன் எழுதியுள்ளதை அவரது நாவல்களில் காணமுடிகிறது.

எஸ்.ராமகிருஷ்ணன் தமிழ் இலக்கிய உலகில் மிக முக்கியமான படைப்பாளியாகக் கருதப்படுகிறார். இவர் 9 நாவல்கள், 20 சிறுகதைத் தொகுப்புகள், 3 நாடகங்கள், 21 குழந்தைகள் நூல்கள், 3 மொழிபெயர்ப்பு நூல்கள், 24 கட்டுரைத் தொகுப்புகள், 10 உலகத் திரைப்பட நூல்கள், 16 உலக இலக்கிய நூல்கள் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவரது 'சஞ்சாரம்' நாவலுக்கு 2018ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டுள்ளது. இவரது படைப்புகள் சமூகத்தின் பல்வேறு தளங்களில் இயங்கும் மனிதர்களின் வாழ்க்கையை மிகவும் யதார்த்தமாகப் பதிவு செய்கின்றன.

இந்த ஆய்வுக் கட்டுரை எஸ்.ராமகிருஷ்ணனின் 'சஞ்சாரம்', 'இடக்கை', 'பதின்' ஆகிய புதினங்களில் காணப்படும் குடும்பம் பற்றிய கருத்துகளை ஆராய்வதாக அமைகிறது. இக்கட்டுரை ஐந்து பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது: அறிமுகத்திற்குப் பின், இலக்கியங்கள் காட்டும் சமூகச் சிந்தனைகள், குடும்பம் மற்றும் குடும்பச் சிக்கல்கள், தீய பழக்கவழக்கங்கள், ஊட்டச்சத்துக் குறைபாடு, ஆண்களின் சுயநலம், மற்றும் முடிவுரை ஆகிய பிரிவுகள் அமையும்.

## 2. இலக்கியங்கள் காட்டும் சமூகச் சிந்தனைகள் (Social Thoughts Reflected in Literature)

இலக்கியங்கள் ஒவ்வொரு காலகட்டத்தின் சமூக வாழ்க்கையையும் பதிவு செய்வதில் முக்கியப் பங்காற்றுகின்றன. சங்க இலக்கியங்கள் தமிழரின் பண்டைய நாகரிகத்தையும், வாழ்க்கை முறையையும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. அக்கால மக்கள் தங்கள் மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுத்துக் கொள்ளாமல், அவர்களுடைய வாழ்க்கை முறைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர்கள்.

'உணவு, உடை, உறையுள்' போன்ற அடிப்படைத் தேவைகளுக்காக மனிதன் தனது குடும்பத்திற்குள்ளேயே போராடும் நிலை உள்ளது. மனிதன் தனது உரிமைக்காக சமுதாயத்தில் போராட வேண்டிய நிலையில் இருக்கிறான். இத்தகைய அவசியப் போராட்டங்களை மேற்கொள்ளும் பொழுது அந்த மனிதனுக்கு குடும்பத்திலும், சமுதாயத்திலும் எண்ணற்ற சிக்கல்கள் உருவாகின்றன.

எஸ்.ராமகிருஷ்ணனின் புதினங்கள் ஒரு சமூகத்தை மையப்படுத்தி இயங்கும் அகம், புறம் ஆகிய அடிப்படை வாழ்வியல் சூழல்களை உணர்ச்சிவயப்படுத்தாது, எதார்த்தப் பதிவுகளை இயல்பாக வெளிப்படுத்தும் போக்கோடு அமைக்கப்பட்டுள்ளன. அவரது படைப்புகள் சமூகத்தின் பல்வேறு தளங்களில் இயங்கும் மனிதர்களின் வாழ்க்கையை, குறிப்பாக ஓரங்கட்டப்பட்ட மக்களின் வாழ்க்கையை, மிகவும் யதார்த்தமாகப் பதிவு செய்கின்றன.

## 3. குடும்பம் (Family)

சங்ககாலம் 'குடும்பம்' என்ற அமைப்பு நிலை பெற்றுவிட்ட காலம் ஆகும். குடும்பம் என்ற சொல் சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியத்திலும் இடம்பெறவில்லை. மாறாக 'மனை', 'இல்', 'இல்லம்', 'குடி' என்ற சொற்கள் தான் குடும்பம் என்ற பொருளில் வழங்கி வந்துள்ளன. திருக்குறளில்தான்

**"இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்**
**குற்ற மறைப்பான் உடம்பு" (குறள். 1029)**

என்று முதன் முதலில் கையாளப்பட்டிருக்கிறது.

**Article DOI: https://doi.org/10.63300/tm12032026.16**

குடும்பம் என்ற அமைப்பிற்கு வரையறையாக அறிஞர்கள் தரும் விளக்கங்கள் கீழ்வருமாறு சுட்டப்படுகின்றன:

மார்க்கன் கூறுகிறார்: "குடும்பம் என்பது இயங்கும் தத்துவமாகும். இது ஒரு போதும் இயங்காதிருப்பதில்லை. சமுதாயமானது கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு முன்னேறிச் செல்வதாகும். கீழான வடிவத்திலிருந்து மேலான வடிவத்திற்கு முன்னேறிச் செல்வதற்கும் குடும்பம் என்ற அமைப்பே காரணமாகிறது" (மார்க்கன், 2018, ப.65). பக்தவத்சலபாரதி குறிப்பிடுகிறார்: "குடும்பம் என்னும் அமைப்பானது ஓர் ஆணும் பெண்ணும் அவர்களுடைய சமுதாய மரபுப்படி மனவாழ்வில் ஈடுபடும் நிலையில் மட்டுமே தோன்ற முடியும். அவ்வாறு இணைந்தால்தான் அச்சமுதாயத்தில் அவர்கள் குடும்பமாக ஏற்றுக் கொள்ளப்படுவர். அவ்வாறன்றி ஒரே வீட்டில் ஓர் ஆணும் பெண்ணும் காதலர்களாகவோ, வேறு வகையிலோ உறவு பெற்று உண்டு மகிழ்ந்து வாழ்ந்தாலும் அவர்களிடையே சமுதாயம் ஏற்றுக்கொள்ளக் கூடிய கணவன், மனைவி உறவு அமையாதவரை அவர்கள் குடும்பம் என்ற அமைப்பை ஏற்படுத்தவியலாது" (பக்தவத்சலபாரதி, 2003, ப.168).

தொல்காப்பியர் ஆண், பெண் இணைவைப் பற்றியும், திருமண பந்தத்திற்கான முறைமை குறித்தும்,

**"பொய்யும் வழுவும் தோற்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (தொல். பொருள். கற்பியல். நூ.4)**

என்னும் நூற்பாவில் எடுத்துரைத்துள்ளார்.

எங்கோ பிறந்த ஆணையும், வேறெங்கோ பிறந்த பெண்ணையும் திருமணம் என்ற சடங்கில் இணைப்பதால், 'குடும்பம்' உருவாகிறது. "திருமணத்திற்கு பிறகு குழந்தைகள் பிறப்பதால் அப்பா, அம்மா, குழந்தைகள் என்று ஒரு பந்தம் உருவாகிறது. 'வீடு என்பது அப்பாவின் வாய். அதற்குள் நாங்கள் எல்லோரும் சிறுசிறு பற்களைப் போல அடங்கி இருக்கிறோம். அப்பாவிற்காக வேலை செய்வதுதான் எங்கள் கடமை'" (எஸ்.ராமகிருஷ்ணன், 2022, ப.129) இவ்வாறு வீடு பற்றி பதின் நாவல் வரையறுத்துள்ளது.

சமூகத்தின் அடிப்படை உருவம் குடும்பம் எனலாம். இந்தியச் சூழலில் மொத்த இயக்கமும் குடும்ப அமைப்பை கருவாகக் கொண்டுள்ளன. ஒவ்வொரு குடும்பத்தின் நடைமுறை இயக்கத்தை நுட்பமாக ஊடுருவிப் பார்க்கும் போது அது பல வகையான வேண்டா வெறுப்புகளையும் சிக்கல்களையும் தன்னகத்தே கொண்டு இயங்கி வருவதை உணரலாம். சமுதாய பிணக்குகளுக்கு சாதியும் மதமும் பெருமளவுக்குக் காரணங்களாகும். அதைப் போல குடும்பமும் மிகப் பல பிணக்குகளைக் கொண்டு இயங்குவதாகும்.

### 3.1 குடும்பச் சிக்கல்கள் (Family Problems)

எஸ்.ராவின் புதினங்களில் குடும்பம் அது சார்ந்த உறவுகள். உறவு மாந்தர்களில் ஒவ்வொருவரின் வெவ்வேறான நடப்புகள், அதன் அடிப்படையில் உருவாகும் தாக்கங்கள், தேவைகள், நுகர்வுகள், மன அழுத்த வெளிப்பாடுகள் ஆகியன வெளிப்படையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக குடும்பத்தில் ஏற்படும் பிணக்குகள்: உணவு, உடை, உறவு, நட்பு, தொழில், குடும்பத்துப் பெரியோர்கள், சிறியோர்கள், கணவன்-மனைவி, மாமியார்-மரபுகள், பொருளாதாரப் பற்றாக்குறை, சில கௌரவப் பிரச்சனைகள் மற்றும் சில காரணங்கள் குடும்பச் சிக்கலை ஏற்படுத்தும் காரணிகளாகும்.

குடும்பத்தில் பெரியவர்கள் இருந்தால் அந்த குடும்பம் மிகச்செழிப்போடு வாழ்க்கையை நடத்தும் என்பதை எஸ்.ரா. அவர்கள் பதிவு செய்துள்ளார். தனது குழந்தைக்கு ஜலதோசம் பிடித்துவிட்டது. அதனால் அவன் மிகவும் துன்பப்பட்டதைக்கண்டு தாய் வருத்தமடைகிறாள். பின்னர் அவனுக்கு துளசி கசாயம் வைத்துக் கொடுத்து ஜலதோஷத்தை சரிசெய்தாள் என்பதை

"ஜலதோஷம் பிடித்தவுடன் அம்மா துளசிகசாயம் வைத்துவிடுவாள். அதை குடிக்கவே முடியாது. அதற்காகவாவது ஜலதோஷம் பிடிக்காமல் இருக்க வேண்டும். வாசனையும் ருசியும் விலகிப்போய்விடும் என்றும், ஜலதோஷம் முற்றிப் போனால் அப்பா கோபாலன் டாக்டரிடம் அழைத்துப் போவார். அவருக்கு சிறுவர்களைக் கண்டால் பிடிக்காது" (எஸ்.ராமகிருஷ்ணன், 2022, ப.50) என்று அப்பாவும் அம்மாவும் குடும்பத்தில் குழந்தைகளைக் கண்காணிக்கும் முறைகளை பதின் நாவல் வழி அறியமுடிகிறது.

குடும்பத்தில் உறவுகள் தங்கள் எண்ணங்களைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. பதின் நாவலில் செழியன் கதாபாத்திரம் மிகவும் முக்கியமானது. அவனுக்காக அனைவரும் வேண்டிக் கொள்கின்றனர். அவனது உடல்நலம் மற்றவர்களை விட சுமையானது. அவனது உடல்நலம் சீராக வேண்டி அம்மா, அப்பா, தம்பி, தங்கை, அண்ணன் என குடும்ப உறவுகள் தங்களுக்காக வேண்டிக் கொள்கின்றனர்.

"என்தம்பி ஒரு நோயாளி, நோஞ்சான். பிறக்கும் போதே மெலிந்த எலும்புக் கூடு போலத்தானிருந்தான். அவன் செத்துப்போய்விடுவான் என்று தான் டாக்டர்கள் சொன்னார்கள். ஆனால் எப்படியோ பிழைத்துக் கொண்டான். ஆனால் ஆறு வயதாகியும் உடம்பில் எலும்பைத் தவிர ஒன்றுமேயில்லை" (எஸ்.ராமகிருஷ்ணன், 2022, ப.122) என்று அவனது உடல் குறித்தும்,

"இரண்டு நாட்களுக்குப் பிறகு நள்ளிரவில் செழியனுக்குக் கைகால்கள் வெட்டி இழுத்தன. அம்மா வெந்நீர் வைத்து எடுத்துக் கொண்டு வருவதற்குள் செழி செத்துப் போயிருந்தான். அம்மா கதறி அழுதாள்." (எஸ்.ராமகிருஷ்ணன், 2022, ப.124) என்று தாயின் அன்பை பதின் நாவல் வெளிப்படுத்தியுள்ளது.

நிமித்தம் புதினத்தில் எஸ்.ராவால் காட்டப்படும் தேவராஸ் எனும் பாத்திரத்தின் புறக்கணிப்பு குடும்பம் என்ற பொருள் புதினத்தை வாசிப்போர் வெறுப்படையச் செய்யும் போக்காக உள்ளது. தேவராஸின் தாய், தந்தை, அக்காவை உள்ளடக்கிய குடும்பமும் அவரின் நண்பர் என்றொரு குடும்பமும் மட்டுமே பதிவாகக் காணப்படுகிறது. அவனுக்கு இருந்த சிறு குறைபாடு அவனை ஒதுக்குவதற்குக் காரணமாகிறது.

**Article DOI: https://doi.org/10.63300/tm12032026.16**

அவனுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து வீட்டில் அவன் மீது யாரும் அக்கறை எடுத்துக் கொண்டதே கிடையாது. அம்மா அவனுக்கு முலைப்பால் கொடுத்தது கூட வெறும் மூன்று நாட்கள் தான் என ஒருமுறை சொன்னாள். பால் வற்றிப் போய் விட்டதாம். வேலைக்கார முத்தம்மாதான் பால் கொடுத்திருக்கிறாள். அவள் குணம் அப்படியே வந்து விட்டது என்று பெரியக்கா திட்டினாள் எனும் கூற்று வழி குடும்பத்தில் இருந்த சிக்கல் அவனை குடும்பத்தில் இருந்து தனிமைப்படுத்திப் பிச்சைக்காரனை விட கீழான நிலைக்குத் தள்ளுவதற்கு காரணமாக அமைந்தது என்பதை அறிய முடிகிறது.

### 4. தீய பழக்கவழக்கங்கள் (Bad Habits)

சமூகத்தின் அடிப்படை உருவம் குடும்பம் எனலாம். இந்தியச் சூழலில் அதன் மொத்த இயக்கமும் குடும்ப அமைப்பைக் கருவாக கொண்டுள்ளது. ஒவ்வொரு குடும்பத்தின் நடைமுறை இயக்கத்தை நுட்பமாக ஊடுருவி பார்க்கும் போது அது பல வகையான வேண்டா வெறுப்புகளையும் சிக்கல்களையும் தன்னகத்தே கொண்டு இயங்கி வருவதை உணரலாம்.

தீய பழக்கம் என்பது, தன்னை மட்டுமின்றி, குடும்பத்தில் உள்ளோரையும் சேர்த்து வதைப்பது. புகைப் பழக்கம் உடலுக்குக் கேடு என்பதை அறிந்தும் அதனை புகைக்காதவர்கள் ஒரு சிலர் மட்டுமே. குடும்பத்தில் உறவுகள் நிலையில் தீய பழக்கங்கள் ஒரு சிலரிடம் மட்டுமே புரையோடியுள்ளதை பதின் நாவல் காட்டுகிறது.

"அப்பாவுக்கு சிகரெட் வாங்குவதற்காக மகன் செல்கிறான். இருட்டின் பயத்தில் அது சேற்றில் விழுந்து நனைகிறது. காசு விரயமான கோபத்தில் மகனை திட்ட, அம்மா மகனுக்கு வக்காலத்து வாங்க, அப்பா அம்மாவை அடிக்கிறார். அவளுடன் சேர்ந்து பிள்ளைகளும் அழுகின்றனர்" (எஸ்.ராமகிருஷ்ணன், 2022, ப.110). இதிலிருந்து ஒரு குடும்பத்தின் சந்தோசத்தை பறிக்கும் வல்லமை தீய பழக்கத்துக்கு உண்டு என்பதை அறியமுடிகிறது.

குடிப்பழக்கம் என்பது இன்றைய சூழலில் இளைஞர்களிடையே பெருகி வருகிறது. குடிப்பழக்கத்தால் பெரும்பாலான குடும்பங்கள் சீரழிந்துள்ளன. குடும்பத்தில் உள்ள ஒற்றுமையை குலைக்கும் பெரும் சக்தியாக குடிப்பழக்கம் இருந்து வருகிறது. குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டால் அதனை நிறுத்துவதே கடினம். சஞ்சாரம் நாவலில் வீரசின்னு குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி தன் வாழ்க்கையை இழந்து விடுகிறான். இதனை,

"வீரசின்னு மிதமிஞ்சிக் குடித்திருப்பது அவனது வேஷ்டிக் கட்டிலே தெரிந்தது. எச்சில் ஒழுகும் வாயைப் புறங்கையால் துடைத்தபடியே அவன் காற்றைப் பற்றிக்கொண்டு நிற்பது போல தடுமாறிக் கொண்டிருந்தான். தான் சுயநினைவில் வித்வான் ரத்தினத்தை அடிக்கிறான். மேலும் தகாத வார்த்தைகளால் அவனை திட்டுகிறான். இவ்வாறாக குடிப்பழக்கம் சமுதாயத்தில் பெரும் பிரச்சினையை ஏற்படுத்துகிறது" (எஸ்.ராமகிருஷ்ணன், 2019, ப.54) என்னும் கூற்றால்; சுயநினைவிழந்த ஒருவனால் தன் மனதைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை எஸ்.ரா. குறிப்பிட்டுள்ளார்.

### 5. ஊட்டச்சத்துக் குறைபாடு (Malnutrition)

குடும்பம் செழிப்பாக வளர வேண்டுமெனில் சத்தான உணவுகள் தேவை. சத்தான உணவுகள் கிடைக்காமல் குழந்தைகளும் பெரியவர்களும் துன்பப்படுவதை பதின் நாவல் காட்டுகிறது.

குடும்பத்தில் போதிய வசதி இல்லாததால், கர்ப்பக் காலத்தில் சத்தான உணவுகள் எடுத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் பிறக்கும் குழந்தை ஆரோக்கியமில்லாமல் நோயுடன் பிறக்கிறது.

பதின் நாவலில் வரும் செழியன் ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பிறந்த சில ஆண்டுகள் மட்டுமே வாழ்கிறான். அவனது உடலைப் பார்த்து குடும்பத்தில் உள்ள அனைவரும் கவலையுறுகின்றனர்.

"செழி செத்துப் போயிருந்தான். அம்மா கதறி அழுதாள். எல்லாத்தையும் காலையில பாத்துக்கிடலாம் தூங்குங்க என்றார் அப்பா" (எஸ்.ராமகிருஷ்ணன், 2022, ப.124) என்பதிலிருந்து மகனின் மரணத்திற்கு கதறி அழ வேண்டிய ஒரு அப்பாவின் மனநிலை, குடும்பத்தில் நிகழும் ஆரோக்கியமின்மையால், மரணம் ஒரு சாதாரண நிகழ்வாக மாறிவிட்டது என்பதை காணமுடிகிறது.

**6. ஆண்களின் சுயநலம் (Selfishness of Men)**

குடும்பம் எனும் முதன்மை நிறுவனத்தில் அதன் உறுப்பினராக இயங்கும் தலைமை மனிதன் ஒவ்வொருவரும் தம்மை தக்க வைத்துக் கொள்வதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் தீர்வு தமக்குச் சாதகமற்றதாக அமையும் போது, சமுதாயத்தில் மதிப்புமிக்க நிலைக்களமாகக் கருதப்படும் குடும்பம் என்னும் நிலையும் சமூக மதிப்பிழந்து தடுமாறும் சிக்கலை அழுத்தமாக சுட்டியுள்ளார் எஸ்.ரா.

குடும்பத்தில் முதன்மைத் தலைவராக வலம் வருபவர்கள் ஆண்கள். ஆண்கள் தங்களுடைய தொழிலைச் செய்து கொண்டே குடும்பத்திற்காக உழைக்கும் பேறு பெற்றவர்கள். அதனாலேயே அவர்களிடம் சுயநலம் மேலோங்கியிருப்பதை நாவல்கள் கட்டமைக்கின்றன. அவ்வகையில் எஸ்.ரா நாவல்களில் பெரும்பாலும் ஆண்களின் குரல்கள் மேலோங்கி இருப்பதைக் காட்டுகின்றன.

'உத்தியோகம் புருஷலட்சணம்' என்பார்கள். அவ்வாறு உத்தியோகத்துக்குச் சென்று பணம் சம்பாதிப்பதாலேயே ஆண்கள் ஆள்பவர்களாகவும், குடும்பத்தில் உள்ள மனைவி, மக்கள் அவர்கள் சொல்கின்ற சொற்களுக்குக் கட்டுப்பட்டு வர வேண்டிய நிலை உண்டாகிறது. "பஸ் எப்போவாதுதான் வரும். நடந்து போய்விடுவோம். அப்பா சொல்ல, வெயிலோடு பிள்ளைகளை இழுத்துக் கொண்டு அம்மா நடக்க ஆரம்பிக்கிறார். அப்பா ஒரு ஆள் பைக்கில் பின்னால் உட்கார்ந்து கொண்டு இவர்களைக் கடந்து போகிறார். அம்மாவின் முகம் கருத்துப் போனது" (எஸ்.ராமகிருஷ்ணன், 2022, ப.110). இதிலிருந்து ஒரு குடும்பத் தலைவனின் சுயநலமும், அக்குடும்பத்தின் மீது அவருக்குள்ள அதிகாரமும் வெளிப்படுகிறது.

சிவசங்கரியின் நெருஞ்சிமுள் நாவலில் வரும் சுந்தரேசன் என்பவர் மிகச்சிறந்த காந்தியத் தொண்டர். சுந்தரேசன் தன்மகள் பூமாவிடம்,

"நாம ஒவ்வொருத்தரும் நான்ங்கற மமதை, நான் உயர்வு, அவன் தாழ்வுங்கற அகங்காரம் இல்லாம இருக்கவும், இரண்டதம் போ அறியாம பிறருக்கு உபகாரம் பண்ணவும் எளிமையா மகாத்மா மாதிரி வாழவும் கத்துக்கணும்" (எஸ்.ராமகிருஷ்ணன், 2022, ப.129) என்று வேண்டத் தவறியதே இல்லை என்னும் கூற்றும் ஒப்பு நோக்கத்தக்கது.

"என் கண்ணீர்த் துளி பட்டுக் கரைந்த மண்ணை எடுத்துதான் இந்த பானம் தயாரிக்கிறேன். என்னைத்தான் நீங்கள் குடிக்கிறீர்கள்" (எஸ்.ராமகிருஷ்ணன், 2022, ப.205) என்று மணப்பெண் ஆகிய லகியா கூறுகிறாள்.

அவள் தயாரித்துக் கொடுத்த பானத்தின் போதையால் உண்மை நிலையை உணர மறந்த கணவன், ஒவ்வொரு முறையும் அந்த பானத்தை தயாரிக்கச் சொல்கிறான். அதிலும் உச்சக்கட்டமாக அந்த பானத்தை தான் அருந்தியது மட்டும் இல்லாமல், தன் நண்பர்களுக்கும் அதனை தயாரித்து தரும்படி வற்புறுத்த, கணவனுக்காக அதையும் செய்து, இறுதியில் கிணற்றில் குதித்து கரைந்து போகிறாள். அவளது தலைமயிர் மட்டுமே மிச்சமாகிறது.

மேற்குறித்த உரையாடலில் இருந்து ஆண்களின் கட்டுக்குள் பெண்ணானவள் அடங்கிப்போகிறாள் என்பதும், ஆணுக்குப் பணிவிடை செய்வதிலேயே பெண்ணின் வாழ்நாள் கழிந்து விடுகிறது என்பதும் பெறப்படுகிறது.

## 7. முடிவுரை (Conclusion)

இந்த ஆய்வுக் கட்டுரை எஸ்.ராமகிருஷ்ணனின் 'சஞ்சாரம்', 'இடக்கை', 'பதின்' ஆகிய புதினங்களில் காணப்படும் குடும்பம் பற்றிய கருத்துகளை ஆராய்ந்தது. சங்க காலத்தில் நாடானது நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டு அந்நிலத்தின் வழியே மக்களும் தங்களது வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தனர் என்பதும், சங்க கால மக்கள் மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுத்துக் கொள்ளாமல் அவர்களுடைய வாழ்க்கை முறைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர் என்பதும் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

'உணவு, உடை, உறையுள்' போன்றவை ஒவ்வொரு மனிதருக்கும் அடிப்படைத் தேவைகளாக உள்ளன. இவற்றிற்காக மனிதன் ஒரு குடும்பத்திற்குள்ளேயே போராடும் நிலை உள்ளது என்பதும், எஸ்.ராவின் புதினங்கள் ஒரு சமூகத்தை மையப்படுத்தி இயங்கும் அகம், புறம் ஆகிய அடிப்படை வாழ்வியல் சூழல்களை உணர்ச்சிவயப்படுத்தாது, எதார்த்தப் பதிவுகளை இயல்பாக வெளிப்படுத்தும் போக்கோடு அமைக்கப்பட்டுள்ளன என்பதும் சுட்டப்பட்டுள்ளது.

எஸ்.ராவின் புதினங்களில் குடும்பம் அது சார்ந்த உறவுகள். உறவு மாந்தர்களில் ஒவ்வொருவரின் வெவ்வேறான நடப்புகள், அதன் அடிப்படையில் உருவாகும் தாக்கங்கள், தேவைகள், நுகர்வுகள், மன அழுத்த வெளிப்பாடுகள் ஆகியன வெளிப்படையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன என்பதும் விளக்கப்பட்டுள்ளன.

குடும்பம் என்றாலே பல பிரச்சனைகள் இருப்பது வழக்கம். குடும்பச் சிதைவிற்கு அவ்வீட்டில் உள்ள நபர்களே காரணமாக அமைகின்றனர். கணவன், மனைவி, ஆண்வாரிசு இல்லாமை, ஆண்-பெண்ணின் தவறான உறவு, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமை குடும்பச் சிதைவிற்கு காரணமாக அமைகின்றன என்பதும் கதைமாந்தர்கள் வாயிலாக சுட்டப்பட்டுள்ளன.

குடும்பத்தில் தீய பழக்கவழக்கங்கள், ஊட்டச்சத்துக் குறைபாடு, ஆண்களின் சுயநலம் ஆகியவை குடும்ப உறவுகளைப் பாதிக்கும் முக்கிய காரணிகளாக எஸ்.ராவின் புதினங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. புகைப்பழக்கம் ஒரு குடும்பத்தின் சந்தோசத்தைப் பறிக்கும் வல்லமை கொண்டது என்பதும், குடிப்பழக்கம் சமுதாயத்தில் பெரும் பிரச்சினையை ஏற்படுத்துகிறது என்பதும் சஞ்சாரம் மற்றும் பதின் நாவல்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக குழந்தைகள் பாதிக்கப்படுவதும், அதன் விளைவாக மரணம் சாதாரண நிகழ்வாக மாறிவிடுவதும் பதின் நாவலில் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆண்களின் சுயநலமும்

அதிகாரமும் பெண்களை அடக்கி ஆளும் நிலையை இடக்கை மற்றும் பதின் நாவல்கள் வெளிப்படுத்துகின்றன.

எஸ்.ராமகிருஷ்ணனின் புதினங்கள் குடும்பம் என்னும் நிறுவனத்தின் உள்ளார்ந்த இயக்கங்களை, அதில் நிலவும் சிக்கல்களையும் முரண்பாடுகளையும், மிகவும் யதார்த்தமாகவும் ஆழமாகவும் பதிவு செய்கின்றன. இப்புதினங்கள் சமூகத்தின் அடித்தள அமைப்பான குடும்பத்தின் பல்வேறு முகங்களை வாசகர்களுக்கு எடுத்துக் காட்டுகின்றன.

## 8. நூல் பட்டியல் (References)


[1]. பக்தவத்சலபாரதி. (2003). *பண்பாட்டு மானுடவியல்*. மெய்யப்பன் பதிப்பகம்.

[2]. பவானந்தம் பிள்ளை, ச. (1984). *பவானந்தர் தமிழ்ச் சொல்லகராதி*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

[3]. மார்க்கன். (2018). *இலக்கியமும் வாழ்வியலும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

[4]. எஸ். ராமகிருஷ்ணன். (2019). *சஞ்சாரம்*. தேசாந்திரி பதிப்பகம்.

[5]. எஸ். ராமகிருஷ்ணன். (2022). *இடக்கை*. தேசாந்திரி பதிப்பகம்.

[6]. எஸ். ராமகிருஷ்ணன். (2022). *பதின்*. தேசாந்திரி பதிப்பகம்.

[7]. இராஜன், க. (2020). *தமிழ் நாவல்களில் குடும்ப உறவுகள்: ஓர் ஆய்வு*. பாரதி பதிப்பகம்.

[8]. சண்முகம், பொ. (2019). *சமகாலத் தமிழ் இலக்கியத்தில் சமூகம்*. கங்கை புத்தக நிலையம்.

[9]. குமார், அ. (2021). *தமிழ் புதினங்களில் பெண்ணியப் பார்வை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

[10].வேலாயுதம், ச. (2020). *இலக்கியமும் சமூக மாற்றமும்*. மெய்யப்பன் பதிப்பகம்.

[11].செல்வி, ம. (2022). *எஸ். ராமகிருஷ்ணனின் புதினங்கள்: ஓர் பார்வை*. *தமிழ் இலக்கிய ஆய்விதழ்*, 7(8), 45-58.

[12].ராமநாதன், த. (2021). *தமிழ் நாவல்களில் குடும்ப சிதைவு*. *சமகால இலக்கியம்*, 5(3), 112-125.

[13].பிரேமா, க. (2023). *எஸ். ராமகிருஷ்ணனின் படைப்புகளில் சமூகப் பிரதிபலிப்பு*. *இலக்கிய சிந்தனை*, 9(2), 78-92.

[14].சுகுமார், ப. (2020). *தமிழ் புதினங்களில் ஆண்-பெண் உறவுகள்*. அகரம் பதிப்பகம்.

[15].அன்புச்செல்வி, ந. (2021). *சமகாலத் தமிழ் இலக்கியத்தில் குடும்பக் கருத்தாக்கம்*. *தமிழாய்வு*, 12(4), 156-170.